**Judicial Form No.53**
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.**

**DVC No. 01 /2024**

**2024–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14–ம் தேதி திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் ம.சா.1 –வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54–வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. வெங்கடேசன், Grade–III Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | – | 1 | தொழில் | – | வீட்டு குடித்தனம் |
| பெயர். | – | மரியாள் | வட்டம் | – | கண்டாச்சிபுரம். |
| க/பெ. | | ஜெனித் அகஸ்டீயன் | சமயம் | – | – |
| கிராமம் | – | முகையூர் | வயது | – | 40 |

**14.10.2024**

எதிர்மனுதாரர்ஆஜர்.

எதிர் மனுதாரர் வழக்கறிஞர் சாட்சியின் குறுக்கு விசாரணை நீதிமன்ற கதவுகள் மூடப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். ஜீவனாம்சம் கேட்டுதான் பரிகாரம் கேட்டுள்ளேனா வேறு பரிகாரம் ஏதாவது கேட்டுடுள்ளேனா என்றால் எனது படிப்பு சான்றிதழ் கேட்டும் எனக்கும் பிள்ளைகளுக்கும் சேரவேண்டியதை கேட்டுள்ளேன்.

2. வேறு பரிகாரம் எதுவும் கேட்டுள்ளேனா என்றால் இதர தேவைகள். இதர பரிகாரம் என்றால் என்ன பரிகாரம் என்று குறிப்பிட்டுஎனது மனுவில் சொல்லவில்லை என்றால் வீட்டு வாடகை, பிள்ளைகள் படிப்பு செலவு, அப்பாவிடம் இருந்து பிள்ளைக்கு சேரவேண்டிய சொத்துக்கள். அவ்வளவுதானா என்றால் ஆமாம்.

3. இந்த வழக்கை நான் 2016ம் ஆண்டு தாக்கல் செய்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்த தேதியில் இருந்து இன்று வரை எதிர்மனுதாரிடம் இருந்து ரூ.4,20,000/– ஜீவனாம்ச தொகையாக வாங்கியுள்ளேன். இதுநாள் வரையில் நான் அவருடன் சேர்ந்து வாழவேண்டும் என்று ஏதாவது ஒரு நடவக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். மேல அவருடைய ஆபிசருக்கு லெட்டர் போட்டுள்ளேன்.

4. உயர் அதிகாரிகளுக்கு மனு கொடுத்தது ஜீவனாம்சம் கேட்டு மட்டும்தான் சேர்ந்து வாழ நடவடிக்கை கோரி எந்த வித மனுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நான் சேர்ந்து வாழவேண்டும் என்றுதான் இது வரை சொல்லி வருகிறேன். அவர்தான் டைவஸ் வேண்டும் என்று அப்ளை பன்னியிருந்தார். அவர் போட்ட டைவஸ் வழக்கில் நான் எந்த வருடம் ஆஜரானேன் என்றால் 2017ல். அந்த வழக்கில் ஆட்சேபனை போட்டேனா என்றால் ஆமாம். அந்த ஆட்சேபனையில் நான் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இது வரை சேர்ந்து வாழனும் என்றுதான் சொல்லியிருக்கிறேன். பிரிந்து வாழனும் என்று இது நாள் வரை சொல்லவில்லை.

5. இந்நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் எத்தனை முறை எதிா்மனுதாரர் பணம் கட்டவேண்டும் என்று மனு போட்டுள்ளேன் என்றால் 4, 5 முறை இருக்கும். ஒரு முறையாவது நான் எதிர்மனுதாரருடன் சேரந்து வாழ தயாராக உள்ளேன் என்று மனு போட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அதனால் என்னுடைய குறிக்கோலே குழந்தைகளை வைத்துக்கொண்டு பணம் பரிப்பதற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாியல்ல.

6. 2007ம் ஆண்டில் எனக்கு திருமணம் நடந்த பிறகு புனேவில் 5மாதங்களும், மீதி 1–1/2 வருடம் பஞ்சாபிலும் இருந்தோம். நாங்கள் குடியிருந்தது பக்கத்து, பக்கத்து வீடுதான் என்றால் முதலில் வெளியில் வாடகைக்கு சிவிலில் இருந்தோம்.

அப்புறமாக கோட்ரஸ் கிடைத்து அங்கு போனோம். எனது முதல் விசாரணையில் கோட்ரசில் இருந்தபோது என்னை ஒருமையில் கொடுமைப்படுத்தியதாக சொல்கிறேனே அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் இவர் போலீசாக இருப்பதால் இவரிடம்தான் போய் கம்பளைன்ட் கொடுக்கமுடியும் வேறு யாரிடமும் போய் கொடுக்க முடியாது.

7. நான் மனு கொடுத்தெல்லாம் இவருடைய உயர் அதிகாரியிடம்தான் என்றால் இவர் உயர் அதிகாரிக்கு ஓட்டுனர். நம்ம சொல்வதை அவர்கள் கேட்பதில்லை. ஓட்டுனர் செல்வதைத்தான் கேட்கிறார்கள். அவ்வாறு உயர் அதிகாரியிடம் மனு கொடுத்து அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறி ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் சென்னையில் போய் கொடுத்தேன். பெங்களூர், சென்னை, புனே, டெல்லி ஆகிய இடங்களுக்கு போய் கொடுத்தேன்.

8. இது குறித்து ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனு கொடுத்தால் இவர் மூலமாகத்தான் கொடுக்கவேண்டும் இல்லை என்றால் மேல் அதிகாரிகள் எடுக்கமாட்டார்கள். ஜீவனாம்சம் கேட்டு உயர் அதிகாரிகளுக்க ரிஜீஸ்ட்டர் போஸ்ட்டு அனுப்பினேனா என்றால் இல்லை. அதுபோல் இவர் மிரட்டி கொடுமை செய்ததாக மனுவில் கூறியுள்ளதற்கு ஏதாவது ரிஜிஸ்ட்டர் போஸ்ட் ஏதாவது அனுப்பினேனா என்றால் இல்லை. அதனால் இவர் கோட்ரசில் கொடுமைப்படுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை.

9. எதிர்மனுதாரர் மீது இந்த நீதிமன்றத்தில் சிசி.98/2024, குற்ற எண்.18/2016 என்ற வழக்கில் நான்தான் புகார் கொடுத்துள்ளேன் அந்த வழக்கிலாவது எதிா்மனுதாரர் மிரட்டி கொடுமைப்படுத்திய விபத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 2011ம் ஆண்டில் இருந்தே எதிர்மனுதாரர் அவருடைய அத்தை பெண்ணுடன் சேர்ந்துகொண்டு என்னை கொடுமைப்படுத்தியதாக மனுவில் கூறப்பட்டுள்ளது இது தொடர்பாக ஏதேனும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அவர்கள் உரையாடிய வாய்ஸ் ரெக்கார்டு உள்ளது.

அந்த வாய்ஸ் ரெக்கார்டை நீதிமன்றதில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.அது மாறி எந்த ஆணமும் இந்த வழக்கில் போடவில்லை என்றால் சாியல்ல. அந்த உரையாடல் சீடி, யாருடைய கைபேசியில் இருந்து எடுக்கப்பட்டது என்ற விபரத்தை மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் எதிர்மனுதாரர் மொபைலில் இருந்து அவர்கள் இருவரும் பேசிய வாய்ஸ் ரெக்கார்டிங் 5 மணி நேரம் பேசப்பட்டதாக இருந்தது. நான் இது குறித்து கேட்டபோது யாரிடமாவது சொன்னால் துப்பாக்கியால் அவரே சுட்டுக்கொண்டு செத்துவிடுவதாக என்னை மிரட்டினார். உனக்கு அப்பா இல்லை உன்னுடைய பிள்ளைக்கும் அப்பா இல்லாமல் ஆக்கிவிடுவேன் என்றும் சொன்னார்.

10. நான் அவருடைய செல்போனில் இருந்து எடுத்ததாக சொல்கிறேனே அவருடைய சொல்போன் நெம்பர் என்ன ஜெனிட்டாவின் செல்போன் என்ன?. எந்த தேதியில் பேசப்பட்டது?. எவ்வளவு நேரம் பேசப்பட்டது? இது தொடா்பாக கேட்டபோது எதிர்மனுதார் துப்பாக்கியை வைத்துக்கொண்டு அவரே சுட்டுக்கொள்வதாகவும், மேற்சொன்ன விபரத்தை என்னுடைய மனுவிலோ பிரமாண பத்திரத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இப்போதுதான் சொல்கிறேன் நான் வீட்டில் கூட சொல்லவில்லை. அதனால் மனுவிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் அப்படியெல்லாம் இல்லை. ஜம்முவில் வேறு நெம்பர் கொடுப்பார்கள் அந்த நெம்பர் தமிழ்நாட்டில் ஒர்க்காகாது. இந்த விபரத்தை மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, தற்போதுதான் சொல்கிறேன். வேறு ஏதாவது புதியதாக சொல்லவேண்டுமா என்றால் இல்லை.

11. எத்தனை முறை எதிர்மனுதாரர் பேரில் ஜீவனாம்சம் கேட்டு அவருடைய உயர் அதிகாரிகள் இடம் மனு கொடுத்துள்ளேன் என்றால் 10 முறைக்கு மேல் கொடுத்துள்ளேன். அந்த 10 முறைக்கு மேல் அவ்வாறு கொடுப்பதற்கு முன்பே உயர்அதிகாரிகள் இதை கோர்ட்டு மூலமாக தீர்த்துக்கொள்வேண்டும் என்று பதில் கொடுத்துள்ளார்கள் என்றால் வந்தது. இவர் கட்டுவதாக அவருடைய உயர் அதிகாரியிடம் சொல்வார் ஆனால் கட்டுவதில்லை. இவர் அவ்வாறு கட்டவில்லை என்று எனக்கு பதில் அறிவிப்பு ஏதாவது கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை.

12. இவர் கொடுத்த மனுவில் நானும் ஒரு பிரவீன்குமார் என்பவரும் கள்ள தொடர்பில் இருந்ததால் ஜீவனாம்சம் கொடுக்கமுடியாது என்று எதிர்மனுதார் அவருடைய உயர்அதிகாரிகளுக்கு சொல்லியிருந்தார் என்றால் இல்லை. இவர் ஓட்டுனர் என்பதால் இவர் சொல்வதைத்தான் ஆமாம் ஆமாம் என்று ஏற்றுக்கொண்டார்கள். நான் உயர் அதிகாரிகளிடம் கொடுத்த மனுவினால் இவரை உயர்அதிகாரிகள் ஏகப்பட்ட டார்ச்சர் செய்தார்கள் என்றால் இல்லை.

13. எதிர்மனுதாரர் விவாகரத்து வழக்கு போட்டு அதில் குழந்தைகளை தன்னிடம் ஒப்படைக்கச்சொல்லி தனியாக மனு போட்டாரா என்றால் ஆமாம். அந்த மனு போடும்போது அவர் ஜம்முவில் வேலை பார்த்தாரா என்றால் ஆமாம். ஆனால் நான் அவர் ஜம்முவில் இருந்து எப்படி குழந்தைகளை பார்த்துக்கொள்வார் என்று ஆட்சேபனை செய்தேன் என்றால் ஆமாம். அதனால் அவர் ஜம்முவில் நல்ல வேலையை விட்டுவிட்டு குழந்தைகளை பார்ப்பதற்காக சென்னைக்கு மாற்றுதலாக வந்தாரா என்றால் இல்லை. மூன்று வருடத்திற்கு ஒரு முறை எப்போதும் போஸ்ட்டிங் போடுவார்கள். ஆனால் அவர் மனு கொடுத்து அதன்பேரில்தான் மாற்றினார்கள் என்றால் அவர் சண்டைக்கு முன்பே நான் சென்னைக்கு போகபோரேன் என்று 2014ம் ஆண்டேலேயே சொல்லியுள்ளார்.

14. என்னுடைய வழக்கு படி எங்களுடைய சண்டை 2014ம் ஆண்டில் இருந்தே என்று சொன்னால் 2011ல் இருந்தே வாய் சண்டை போய்க்கொண்டிருந்தது. நைட்டில் டிங்க்ஸ் பன்னிட்டு வந்து என்னை அடித்து, ஸ்மோக் பன்னி சூடு வைப்பார், அடிப்பார் லாக்பன்னி வெளியில் போய்விடுவார், மிட் நைட்டில் கூட வரமாட்டார். இந்த விபரத்தை எனது மனுவிலோ பிரமாண பத்திரிக்கையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சண்டை நடந்ததை வீட்டில் சொல்லியுள்ளேன். இவற்றை மனுவிற்காக புதியதாக சொல்கிறேன் என்றால் இல்லை. 2011ல் விழுப்புரத்தில் உள்ள ஊரல் கரைமேட்டில் ஒரு வீட்டில் வாடகைக்கு குடியிருந்தோம் என்றால் சரிதான். அந்த வீட்டில் ஒரே போஷன்தான்.

12. மொத்தம் 5 வீடு என்று அந்த வீட்டின் ஓனரே விவாகரத்து வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் முதலில் இருந்தது ஒரு போஷன்தான். 2வது இருந்தது 5 போஷன். நாங்கள் விழுப்புரத்தில் குடியிருந்தபோது எனக்கும் எனது கணவருக்கும் ஜாயிட்ன் அக்கவுண்ட் இருந்தது என்றால் கல்லியாணம் பன்னியதில் இருந்து இருந்தது. விழுப்புரத்திற்கு வந்த பிறகும் இருந்தது. அந்த வங்கி கணக்கு எதிர்மனுதாரரின் சம்பள கணக்கு என்றால் சா௱தான். அந்த வங்கி கணக்கில் இருந்து முக்கால் வாசி பணத்தை நான்தான் எங்கெல்லாம் செல்கிறேனோ அங்கெல்லாம் பணத்தை எடுத்துள்ளேன் என்றால் வீட்டு வாடகைக்கும், ரூ.5000/-, ரூ.10000/-ம்தான் எடுப்பேன். ஏ.டி.எம். கார்டை அவருடைய அண்ணன் லூர்துமணிதான் வைத்திருந்தார். மாதம் ரூ.20000/- , ரூ.22000/- சீட்டு காசுக்காக அவருடைய அண்ணன்தான் எடுப்பார். மீதி செலவை எங்க அம்மா அண்ணன் தம்பிதான் பார்த்துக்கொள்வார்கள்.

13. இந்த விபரத்தை நான் எனது மனுவிலோ பிரமாண பத்திரத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சா௱யல்ல. நானும் இன்னொரு போஷனில் குடியிருந்து பிரவீன்குமார் என்பவருடன் கள்ள தொடர்பு ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் இல்லை. அப்படி கள்ளத்தொடர்பு ஏற்படுத்திக்கொண்டதின் விளைவாகத்தான் 4வது மனுதாரர் அனன்யா பிறந்தார் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் 4வது மனுதார் எதிர்மனுதாரருக்குதான் பிறந்தார் என்று மசாஆ.5 தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் யார் வாங்கியது என்றால் நான்தான்.

14. மசாஆ.5ல் எதிர்மனுதாரர் பெயரை நானே பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. எதிர்மனுதாரர் ஜம்முவில் இருந்து வந்தவுடன் எனக்கும் பிரவீன்குமாருக்கும் கள்ள தொடர்பு இருப்பதை பிரவீன்குமார் மனைவி லட்சுமி மூலம் கேள்விபட்டும் மேற்படி பிரவீன்குமாரிடம் எதிர்மனுதார் சம்பாதித்து வாங்கிக்கொடுத்த நகைகளை நான் மேற்படி பிரவீன்குமாரிடம் கொடுத்ததாக 06.02.2016ல் விழுப்புரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

என்னை விசாரித்தார்கள். எதிர்மனுதாரர் போன்செய்து அவருடைய நண்பர்கள் பணம் இல்லாமல் கஸ்ட படுவதாகவும், பணமாகவோ, நகையாகவோ அவர் கொடுக்கச்சொல்வார். அப்படிதான் பிரவீன் சாருக்கு நான் கொடுத்தேன். பிரவீன் குமாரை எனக்கு தெரியுமா என்றால் எதிர்மனுதாரர் மூலமாக தொியும்.

15. அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதார் என் மீதும் பிரவீன்குமார் மீதும் கொடுத்த புகாரில் பிரவீன்குமார் என்னுடன் தொடர்பில் இருப்பதை ஒத்துக்கொண்டு என்னிடம்தான் நகைகளை திருப்பிகொடுத்தார் என்று அவரே கைப்பட எழுதி கொடுத்துள்ளார் என்றால் இல்லை. கள்ள தொடர்பு இல்லை அவர் கொடுக்கச்சொல்லிதான் கொடுத்ததாக கைப்பட எழுதி கொடுத்தார். அந்த விசாரணையில் நானும் அவருடன் கள்ளத்தொடர்பு இருப்பது உண்மை என்று ஒத்துக்கொண்டு கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றாலும் அதில் எனது இரு சகோதரர்களும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் இல்லை. சாட்சி கையொப்பம் இல்லை. கள்ளத்தொடர்பு இல்லை நகையை பெற்றுக்கொண்டதாகச்சொல்லித்தான் கையொப்பம் செய்தார்கள்.

16. எதிர்மனுதார் சம்பாதித்து அனுப்பிய பணத்தில்தான் நானும் பிரவீன்குமார் என்பவரும் ஊரேல்லாம் சுத்தி வந்தோம் அது மாறி சென்னை மேற்கு தாம்பரத்தில் ஓட்டல் லைன்ஸ் இந்தியா என்ற விடுதியில் 2015ம் ஆண்டில் நான், பிரவீன்குமார் மற்றும் இரு குழந்தைகளோடு தங்கியிருந்தேன் என்றால் இல்லை. நானும் பிரவீன்குமார் என்பவரும் கள்ளத்தொடர்பு வைத்துக்கொண்ட விபரத்தை ஒத்துக்கொண்டு வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் அவரை மிரட்டி வாங்கியிருப்பார்கள். இந்த விபரத்தை விவாகரத்து வழக்கில் என்னை குறுக்கு விசாரணை செய்யும்போது கேட்கப்பட்டதா என்றால் ஆமாம்.

17. இது தொடர்பாக நானும் பிரவீன்குமாரோ ஏதாவது சட்ட ரீதியான நடவடிக்கை ஏதாவது எடுத்தோமா என்றால் இல்லை. தப்பு பன்னால்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சாட்சி சொல்கிறார். ஒரு விபரத்தை சொன்ன பிறகும் நடவடிக்கை எடுக்காததால் அதை ஒத்துக்கிட்டதாக அர்த்தம் என்றால் சாியல்ல.

18. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது மகளின் ஐ.டி கார்டா என்றால் ஆமாம். அதில் உள்ள செல்போன் நெம்பரை நான்தான் பயன்படுத்தி வருகிறேன் என்றால் ஆமாம். அவர் வாங்கி கொடுத்த சிம் நான்தான் யூஸ்பன்னுகிறேன். அதுபோல சம்மந்தப்பட்ட பிரவீன்குமாரின் கைபேசி எண்.9894391814. இந்த கைபேசி எண். பிரவீன்குமாருடையது என்றால் ஆமாம். நானும் பிரவீன்குமாரும் பலமணி நேரங்கள் கைபேசியில் இரவு என்றுகூட பார்க்காமால் 01.01.2016 முதல் 17.03.2016 வரை பேசியுள்ளோம் என்றால் அவர் போன் செய்து அவருடைய மனைவியிடம் கொடுக்க சொல்வார். அவருடைய மாமியாருக்கும், மருமகளுக்கும் சண்டை வரும் போன் செய்து அவருடைய மனைவியிடம் கொடுக்க சொல்வார் கொடுத்தேன். என்னுடைய மகளும் நிறைய முறை போனை கொண்டுபோய் கொடுத்துள்ளது.

19. பிரவீன்குமாரின் மனைவிக்கு கைபேசி கிடையாது என்றால் ஆமாம். அவர் மனைவியிடம் கைபேசி இல்லை என்பதையும் மிட் நைட் 02.00 மணிக்கு மேல் போன் செய்து அவரிடம் கொடுக்கச்சொல்வார் என்பதையும் நான்தான் நிருபிக்கவேண்டும் என்றால் இப்ப அவர் எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. இரவு 08.00 மணிக்கு போன் செய்து அவருடைய மனைவியிடம் கொடுக்க சொல்லிவிட்டு திரும்ப காலையில்தான் கைப்பேசியை என்னிடம் கொடுப்பார்கள். இவைலெல்லாம் எனது கள்ளத்தொடர்பை பொய்யாக்க பொய்யாக சொல்கிறேன் என்றால் சாிரல்ல.

20. விவாகரத்து வழக்கில் எதிர்மனுதாரர் அவருக்கும் எனக்கும் 4வது மனுதாரர் பிறக்கவில்லை என்று மனு போட்டாரா என்றால் ஆமாம். அந்த மனுவில் நான் ஆட்சேபனை போடும்போது அவர் ஏன் டி.என்.ஏ.பரிசோதனைக்கு செல்லக்கூடாது என்று நான்தான் ஆட்சேபனை போட்டேன் என்றால் சரிதான். அதன் பிறகு எதிர்மனுதாரர் பணத்தை எல்லாம் கட்டி ஆஸ்பெட்டலுக்கு பரிசோதனைக்கு செல்ல தயாராக இருந்தது ஆனால் நான்தான் போகமாட்டேன் என்று போகாமல் விட்டுவிட்டேன் என்றால் நானும் பாப்பாவும் முண்டியம்பாக்கம் ஆஸ்பெட்டலுக்கு என்டர் ஆகிவிட்டோம் அங்கு என்ன சொன்னார்கள் என்று தொியவில்லை. அங்கு அந்த ரூமில் 1/2 மணி நேரம் இருந்தோம் ரிஜிஸ்டரில் சைன் பன்னினோம் என்ன சொன்னார் என்று தெரியவில்லை. திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

தற்போது டி.என்.ஏ. பரிசோதனைக்கு செல்ல தயாராக உள்ளேனா என்றால் விழுப்புரம் கோர்ட்டில் ஏற்கனவே தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

21. விழுப்புரம் நீதிமன்றத்தில் நான் மேற்படி டி.என்.ஏ. பரிசோதனைக்கு போகமாட்டேன் என்றும், அதற்கு காரணம் எனது தாயாரின் கேட்டின் அட்டையும், என்னுடைய படிப்பு ஆவணங்களை கொடுத்தால்தான் டி.என்.ஏ. பரிசோதனைக்கு செல்லுவேன் என்றும் இல்லை என்றால் டி.என்.ஏ. பரிசோதனைக்கு செல்லமாட்டேன் என்றும் எழுதுபூர்வமாக தெரிவித்ததின் பேரில் மேற்படி நீதிமன்றம் எனக்கு எதிராக டி.என்.ஏ. தொடர்பாக உத்தரவு பிறப்பித்தது என்றால் சாியல்ல. அய்யா போய்டு வரச்சொல்லி உத்தரவு கொடுத்ததின் பேரில் அங்கு போனேன்.

22. எனது பெயரிலும், எனது குழந்தைகள் பெயரிலும், இந்த எதிர்மனுதாரர் அவரது உழைப்பில் சொத்துக்களை வாங்கி வைத்துள்ளார் என்றால் முதலில் இரண்டுபேர் பெயரிலும் இருந்தது. நாங்கள் வீட்டிற்கு வந்தவுடன் மிரட்டி பசங்க இரண்டு பேர் பெயரிலும் எழுதி அவரை கார்டியனாக போட்டுக்கொண்டார். இரண்டு குழந்தைகள் ( நிக்கித்தா, ஜாம்சன் ஜோஸ் ) பெயரிலும் இன்று வரை எல்.ஐ.சி. பாலிசி போட்டு வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தொியாது. ஏற்கனவே எல்.ஐ.சி. என் பெயரில் போட்டு என் கையொப்பத்தை அவரே போட்டு அவரே வாங்கிக்கொண்டார்.

23. இந்த விபரத்தை எனது மனுவிலோ எனது பிரமாண பத்திரத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய மனுக்களின் கொடுமை தாங்கமுடியால் அவர் ராணுவத்தில் இருந்த தனது நல்ல வேலையை விட்டுவிட்டு தற்போது வேலையில்லாமல் இருந்து வருகிறார் என்றால் அவர் நல்ல வேலையில் இருந்து வரவில்லை அவருடைய உயர் அதிகாரிகள் அவரிடம் பொண்டாட்டி பிள்ளைகளுக்கு செய்யவேண்டியதை செய்துவிட்டு வா என்று சொல்லிவிட்டார்கள். இவரேதான் எனக்கு வேலை வேண்டாம் பசங்களை பார்க்கபோறேன் என்று வேலையை எழுதி கொடுத்துவிட்டு வந்துவிட்டார். அவர் வந்த விபரம் எனக்கு தொியாது.

24. உண்மையிலேயே 2,3 மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் செலுத்தும்போது 4வது மனுதாரர் அவருக்கு பிறந்திருந்தால் கண்டிப்பாக ஜீவனாம்சம் கட்டுவார் என்றும் மேற்படி குழந்தை எனக்கும் பிரவீன்குமாருக்கும் பிரந்ததால்தான் கட்டவில்லை என்று சொன்னால் சாியல்ல. 2 குழந்தைக்குதான் மாதம் ரூ.6000/– கொடுப்பதே இழுத்தடிக்கிறார். அப்படி இருக்கையில் கள்ளத்தொடர்பு இருப்பதால்தான் 4வது குழந்தைக்கு கொடுக்கமாட்டேன் என்று சாக்கு போக்கு சொல்கிறார்.

25. உண்மையில் அப்படியிருந்தால் 2 குழந்தைகளுக்கும் கொடுத்திருக்கமாட்டார். இதுநாள் வரை ரூ.4,25,000/– செலுத்தியுள்ளார் இரு குழந்தைகளின் பள்ளிக்கூட கட்ணத்திற்கு இது நாள் வரை என்னிடம் எவ்வளவு கட்டவேண்டும் என்று கேட்டாரா என்றால் அதை நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். இவர் கட்டிய தொகை கட்டவேண்டிய தொகையை சொல்லியுள்ளேன். அதுமாறி எதுவும் செய்யவில்லை என்றால் சாியல்ல. அவர்கள் எந்த பள்ளியில் படிக்கிறார் என்று இது நாள்வரை தெரியபடுத்தவில்லை என்றால் சரியல்ல. அவரும் அவருடைய வக்கிலும் அவரது அண்ணியும், அண்ணன்கள் கூட இரண்டுபேர் எல்லோரும் ஸ்கூலுக்கு போய் குழந்தையை தூக்கி ஒரு போட்டோ எடுத்து உயர் அதிகாரிகளுக்கு போட்டோ அனுப்பிவைத்துள்ளார்கள். ஆனால் நீதிமன்றத்தில் அவ்வாறு எடுக்கச்சொல்லி எதுவும் சொல்லவில்லை.

26. அந்த ஸ்கூலில் சென்று எவ்வளவு பணம் கட்டவேண்டும் என்று கேட்டு அந்த பள்ளிக்கு டிடி மூலமாக பணம் அனுப்பினார் என்றால் சரிதான். அது கோர்டு சொல்லிதான் எனக்கு தெரியும். அந்த டிடியை நான் வாங்கக்கூடாது என்று பள்ளி நிர்வாகத்திடம் நான் கூறியதின் பேரில் அது திருப்பப்பட்டது என்றால் அவர் பணம் கட்டியதும் தெரியாது. அவர் டிடி அனுப்பியதும் தொியாது.

27. எதிர்மனுதார் நிக்கிதாவை பார்த்த பிறகு இனிமேல் அவரை பார்க்கக்கூடாது என்று சொல்லி நிக்கிதாவின் தொடையில் சூடு வைத்தேன் அதற்காகத்தான் அந்த போட்டோ எடுக்கப்பட்டது என்றால் இல்லை.

அம்மை வந்த தழும்பு அங்கு உள்ளது. எனது பெயரில் எதிர்மனுதார் விழுப்புரத்தில் ஒரு பிளாட் வாங்கியுள்ளார் அதை கேட்டால் எனது அம்மா தொகை கொடுத்து வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் அம்மா நகை, அண்ணன், தாய் மாமன் நகையெல்லாம் கொடுத்தார்கள். பல்லவன் கிராம வங்கியில் நகையை வைத்து பிளாட்டை இரண்டு பேர் பெயரிலும் வாங்கினேன்.

28. டி.என்.ஏ. பரிசோதனைக்கு சென்றால் உண்மையான தகப்பானர் யார் என்று தொியும் என்று அதற்கு போகாமல் மறுத்து வருகிறேன் என்றால் இப்பவும் சொல்கிறேன் என்னுடைய எம்.ஏ. படித்த சான்றிதழை கொடுத்தால் இப்போது வருகிறேன் என்று சாட்சி சொல்கிறார். அந்த சான்றிதழை என்னிடமே வைத்துக்கொண்டே சாக்கு போக்கு சொல்கிறேன் என்றால் சாியல்ல. அந்த பள்ளி சான்றிதழ் நகல் என்னிடம் இருக்கும்போது அதை கொடுத்தால் எதிர்மனுதாரர் அவருடைய செலவிலேயே நகல் எடுத்து கொடுக்க தயாராக உள்ளார் என்றும், விவாகரத்து வழக்கு நடைபெற்று வந்த காலத்தில் இருந்து தற்போது வரை கொடுக்காமல் டி.என்.ஏ. பரிசோதனையில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சாியல்ல.

29. மற்ற எதிர்மனுதாரர்கள் அவருடைய உறவினர்களுடன் தனித்தனியாக வசித்து வருவதால் பொய்யான காரணங்களை கூறி அவர்களையும் சேர்த்து மனு போட்டுள்ளேன் என்றால் சாியல்ல. எனக்கும் பிரவீன்குமாருக்கும் ஏற்பட்ட கள்ள தொடர்பினாலும், 4வது மனுதாரர் அனன்யா எனக்கும் பிரவீன்குமாருக்கும் ஏற்பட்ட கள்ளத்தோடர்பால் பிறந்த குழந்தை என்பதால் எனக்கும் அனன்யாவிற்கும் ஜீவனாம்சம் கொடுக்க எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் அல்ல என்றால் சாியல்ல. தொடர்ந்த 2,3 மனுதாரர்களுக்கு ஜீவனாம்சம் கொடுக்கவும் பராமரிக்கவும் தயாராக உள்ளார் என்றால் சரியல்ல.

30. 3ம் மனுதாரருக்கு ஆதார் கார்டு உள்ளது என்றால் இன்னும் எடுக்கவில்லை.

**மறு விசாரணை – இல்லை.**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

D.M–cum–JM.
T.V.Nallur.